16.06.2026.

O.S.No. 6/2021

PW1– இசக்கி, த/பெ. சுப்பையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.06.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்)

1. வழக்குச்சொத்து அடிமனை நிலம் 3 செண்ட் என்றால் சரிதான். அதிலுள்ள கட்டிடத்தின் பரப்பளவு 10X10 அளவில் 2 அறைகள், 10X8 அளவில் ஒரு சமையலறை. காங்கிரீட் கட்டிடம் என்றால் சரிதான்.

2. எனது பிராதில் கட்டிடத்தின் மதிப்பு குறிப்பிடவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. கட்டிடத்தின் மதிப்பு ரூ.1 லட்சம் இருக்குமா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

3. கட்டிடத்தின் மதிப்பும் மற்றும் நிலத்தின் மதிப்பும் சேர்த்து இந்நீதிமன்றத்தின் பணமதிப்பு எல்கையை மீறியுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. பிராதில் குறிப்பிட்ட தொகை தோராயமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

4. பிராது தபசில் சொத்து பட்டா மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான், அதன் அசல் ஆவணம் எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. நான், 1ம் பிரதிவாதியின் கணவரான 2ம் பிரதிவாதிக்கு பிராதுதபசில் சொத்தை விற்கும்போது அசல் பட்டாவை ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரியல்ல, நான் அவரிடம் ரூ.3 ஆயிரம் கடன் பெற்றேன், அந்த சமயத்தில் அசல் பட்டாவை அவரிடம் கொடுத்தேன். ஆனால் எனது பிராதில் மேற்படி சங்கதிகள் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. எனது சொத்தில் 2007ம் ஆண்டு பிரதிவாதிகள் என்னை வெளியனுப்பி சுவாதீனத்தை பெற்றுக்கொண்டார்கள். எனது கட்சிப்படி 2021ம் ஆண்டுதான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்திற்கான வீட்டுதீர்வை ரசீது என் பெயரில் உள்ளதா என்றால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

6. வழக்குச்சொத்தில் உள்ள வீட்டிற்கு கடந்த 2000 முதல் 2021ம் வரை 2ம் பிரதிவாதியின் பெயரில்தான் வீட்டுவரி உள்ளது ஊராட்சிமன்ற தலைவர் சான்றளித்தார் என்றால் அவர் என்னிடம் தீர்வை பெறவில்லை. வழக்குசொத்திற்கான அடிமனை பட்டா 2ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

7. நான் 2ம் பிரதிவாதியிடம் 17.10.1989ல் ரூ.7,700/– தொகை பெற்றுக்கொண்டு வழக்குச்சொத்தினை அவர் பெயருக்கு பதிவு செய்யாத கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல, ஆனால் ரூ.3 ஆயிரம் கடன் பெற்றுக்கொண்டேன். எனது வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டதால் எனது பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**